என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***42332—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு 7,800 லிட்டர் பால் கொள்முதல் செய்து, 5,300 லிட்டர் பால் உள்ளூர் விற்பனை போக, 2,500 லிட்டர் பால் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. சங்கத்தின் பால் உற்பத்தி மற்றும் விற்பனையைப் பெருக்கி, சங்கத்தின் பணியை மேலும் விரிவாக்கம் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2014 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.901 கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் 1947 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மிகவும் பாரம்பரியமிக்க பழமையான சங்கம். தற்போது 20 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தினந்தோறும் மூன்றாயிரம் கறவையாளர்களால் 6 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 7 ஆயிரம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் 4 ஆயிரம் லிட்டர் பால் கும்பகோணம் பகுதிக்கும், மீதி 2 ஆயிரம் லிட்டர் பால் தஞ்சாவூர் பகுதிக்கும் கொண்டு செல்லப்படுகிறது. தற்போது கொள்முதல் செய்யப்பட்ட பால், குளிரூட்டப்பட்டு கேன்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏற்கெனவே இரண்டு மகாமக விழாக்களின்போது, கொள்முதல் செய்யப்பட்ட பால் பதப்படுத்தப்பட்டு, பாக்கெட்டில் அடைத்து விநியோகம் செய்யப்பட்டு, அது நல்ல முறையிலும் வரவேற்பைப் பெற்றிருந்தது. எனவே, கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினை மேலும் விரிவாக்கம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நாளொன்றுக்கு 7,800 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் உள்ளூர் விற்பனை சுமார் 5,300 லிட்டர் போக எஞ்சிய சுமார் 2,500 லிட்டர் பால், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இச்சங்கத்தில் தற்போது கொள்முதல் செய்யப்படும் பாலை குளிர்விப்பு செய்ய 3 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட குளிர்விப்பு சாதனம் உள்ளது. இச்சங்கத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் வகையில் சங்கத்தில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட பால் குளிர்விப்பான் ஒன்று கூடுதலாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் தன்னுடைய சொந்த செலவில் வாடகை வாகனம்மூலம்*

2014 ஜூலை 14]

தஞ்சாவூர் ஒன்றிய பால் பண்ணைக்கு பாலை அனுப்பி வந்தது. சங்கத்தின் இந்தச் செலவினத்தைக் குறைக்கும்வகையில், தஞ்சாவூர் ஒன்றியம் மூலமாக இச்சங்கத்தின் பாலினை சேகரம் செய்ய கும்பகோணம், திருவிடைமருதூர் பால் வழித்தடம் என்னும் பெயரில் ஒரு இணைப்பு பால் வழித்தடம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும், இச்சங்கத்தின் 17 உறுப்பினர்களுக்கு 100 சதவிகித மானிய அடிப்படையில் தண்ணீர் தொட்டியுடன்கூடிய கறவைக்கூடம் கட்டித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பால் உற்பத்தியைப் பெருக்க இந்தச் சங்கத்திலுடைய வரவு செலவு வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருப்புவனம் மற்றும் சுவாமிமலை கிளைகள்மூலமாக சுமார் 150 உறுப்பினர்களுக்குக் கறவை மாட்டுக் கடன் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியானது ஏறத்தாழ 5 இலட்சம் மக்களைக் கொண்ட பகுதி. தினந்தோறும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள், வியாபாரிகள் என இலட்சம் பேர் வந்து செல்கின்ற ஒரு பகுதி. வர்த்தக நகரமாகவும், பல கோயில்கள் நிறைந்த வழிபாட்டுத் தலமாகவும், வளரும் நகரமாகவும் கும்பகோணம் உள்ளது. மேலும் தென்னிந்தியாவின் கும்பமேளாவாகக் கருதப்படும் கும்பகோணம் மகாமகம் திருவிழா 2016-ல் வரவிருக்கிறது. குடந்தை பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலுடைய கட்டடத்தில் போதிய இடவசதி உள்ளதாலும், ஏற்கெனவே பாலை பாக்கெட்டில் அடைத்து விநியோகம் செய்ததாலும், வெளியூரிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், பக்தர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட பாலை பாக்கெட்டில் அடைத்து மீண்டும் வழங்கிட, சிறப்பு தேர்வாகக் கருதி, அங்கு பால் பதனிடும்

இயந்திரம் அமைத்து விரிவாக்கம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கும்பகோணம் பகுதியில் தீவிர பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.8 கோடியே 67 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு விரிவாக்கப் பணி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று கும்பகோணம் பகுதியில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்கெனவே நிலுவையில் இருந்த தொகைகளையெல்லாம் தீர்க்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசமூலம் ரூ.7 கோடியே 6 இலட்சம் அளவிற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்ல அங்கு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வலுவூட்டும் ஆதாரத் திட்டத்தின்கீழ் ரூ.32 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

கால்நடை மருத்துவமனை

•22671—திரு. ப. டில்லி பாபு:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூர் வட்டம், சாமாண்டஹள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?